பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2057 ஆடி 16 வெள்ளிக்கிழமை 01.08.2025 அதிர்வு 364

## இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!



இளைஞர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் களுத் துறை, 05▶



# செம்மணியில் நேற்றும் மூன்று எலும்புக்கூடுகள்

## இதுவரை 118 என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது புதிதாக 3 மனித என்புத் தொகு திகள் அடையாளம் காணப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வின் 26ஆம் நாள் அகழ்வு 05▶






தமிழ்க் கைதிகள் தொடர்பான முக்கியமான வழக்கு ஒன்று இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது.

சிறைத் துறை அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்தை 2021 செப்டம்பர் 12ஆம் திகதி இருட்டும் சமயத்தில் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று, அங்கு தடுப்பு காவலில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் 10 பேரை சிறை வளாகத்துக்குள் அழைத்து, தமக்கு முன்னால் முட்டுக்காலில் நிறுத்தி, அவர்களின் தலையில் பிஸ்டலை வைத்து அவர்களைச் சுட்டுக் கொல்லப் போகிறார் என அச்சுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது. இந்ர விடயத்தை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்ட 05▶



# அநுர அரசாங்கம் மிக விரைவில் மக்களால் விரட்டியடிக்கப்படும்!

## சமிந்த விஜேசிறி எம்.பி. தெரிவிப்பு



"மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு நீண்ட காலம் ஆட்சியில் நீடிக்காது. இந்த அரசின் ஆயுள் மிக விரைவில் முடிவுக்கு வரும்."– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பொய்களைக் கேட்டுக் கேட்டு இன்று மக்கள் பொறுமை இழந்துவிட்டனர் என்பதை அமைச்சர் லால் காந்த நன்கு அறிந்து கொண்டிருக்கின்றார். தொடர்ந்தும் பொய்களைக் கூறிக் கொண்டு நாட்டை நிர்வகித்துச் செல்ல முடியாது என்பதை இப்போதாவது அரசு உணர வேண்டும். பொய்களுக்கு ஆயுள் குறைவு என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

அரசியல்வாதிகளுக்கான பாதுகாப்பே அரசுக்குப் பாரிய சுமை எனத் தேசிய மக்கள் சக்தி பரவலான பிரசாரங்களை முன்னெடுத்தது. ஆனால், இன்னும் குறுகிய காலத்தில் அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என எவரும் தனித்து வீதியில் செல்ல முடியாத நிலைமை ஏற்படும். எனவே, அவர்கள் முன்னரை விடத் தமக்கான பாதுகாப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத போது ஒரு கட்டத்தில் அவர்கள் வீதிக்கு இறங்குவதைத் தவிர்க்க முடியாது.

கடந்த ஆட்சிக் காலத்தில் செவனகல சீனி தொழிற்சாலைக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறி லால் காந்த, சுனில் ஹந்துன்னெத்தி ஆகியோரே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அன்று இவ்வாறு முதலைக்கண்ணீர் வடித்தவர்கள் இன்று அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமலுள்ளனர்.

9 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் அரசின் இயலாமையை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். பல அரசியல்வாதிகள் அரசின் நிதியை உகண்டாவில் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறினர். ஆனால், இன்று வரை அரசால் அதனை நிரூபிக்க முடியாது போயுள்ளது. அரசில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் உள்ளனர். டட்லி சிறிசேனவைக் கண்டு அஞ்சுகின்றனர். மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசு நீண்ட காலம் ஆட்சியில் நீடிக்காது." – என்றார்.




# ஆட்சி மாற்றம் திடீரென நடக்கலாம்

## மொட்டுவின் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன சொல்கின்றார்

"ஆட்சி மாற்றத்துக்காக 2029 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியதில்லை. அதற்கு முன்னர்கூட ஜனநாயக வழியில் அது நடக்கலாம். அடுத்த ஜனாதிபதி நாமல் ராஜபக்ஷ என்பது சமூகத்தின் கருத்தாகும்." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பேச்சாளரான சஞ்சீவ எதிரிமான்ன இது தொடர்பில் மேலும் கூறியதாவது:–

"அடுத்த ஜனாதிபதி யார் என்ற கருத்தாடல் சமூகத்தில் உருவாகியுள்ளது. அநுரதான் அடுத்த ஜனாதிபதி என்றோ அல்லது பிரதான எதிரணி ஆட்சியைக் கைப்பற்றும் என்றோ சமூகத்தில் கருத்துக்கள் இல்லை. நாமலைப் பற்றித்தான் தேடப்படுகின்றது.

நாமல்தான் அடுத்த ஜனாதிபதி என்ற கருத்தை நாம் உருவாக்கவில்லை. அது சமூகத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. இயற்கையாகவேதான் அந்தக் கருத்தாடல் உருவாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன என்பது உச்சபட்ச கால எல்லையாகும். எனினும், அதற்கு முன்னர் ஆட்சியை மாற்றலாம். இலங்கையில் இதற்கு முன்னர் எப்படி நடந்தும் உள்ளது.

பதவிக் காலம் முடியும் வரை தேசிய மக்கள் சக்தி அரசு பயணிக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் இல்லை. அரசமைப்பு ரீதியாகக் கூட ஆட்சி மாற்றம் இடம்பெறலாம். ஜனநாயக வழியிலேயே ஆட்சி மாற்றம் நிகழக் கூடும்." – என்றார்.

# 103 கிலோ கிராம் கேரள கஞ்சா வத்திராயனில் கைப்பற்றப்பட்டது



வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரையில் இருந்து 103 கிலோக் கிராம் கேரள கஞ்சா விசேட அதிரடிப்படையினரினால் மீட்கப்பட்டு மருதங்கேணி பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை கரவெட்டியில் உள்ள விசேட அதிரடிப்படையினர் மேற்படி பகுதியில் சோதனை நடத்தினர்.

இதன்போது 54 பொதிகளில் இருந்த 103 கிலோ கஞ்சா மீட்க்கப்பட்டு மருதங்கேணி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருத்தங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# இராஜதந்திரத்தை மஹிந்தவிடம் கற்றுக்கொள்ள வேண்டும் அநுர!

## இப்படிக் கூறுகின்றது மொட்டுக் கட்சி

"போர்க் காலத்தில் பலம் பொருந்திய நாடுகளுடன் இராஜதந்திரச் சமரில் ஈடுபட்ட தலைவர்தான் மஹிந்த ராஜ பக்ஷ. எனவே, இராஜதந்திரம் என்றால் என்னவென்பது தொடர்பில் ஜனாதிபதி அநுர, மஹிந்தவிடம் கேட்டு, கற்றுக் கொள்ள வேண்டும்." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரி வித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது :-

"போர்க் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ பல இராஜதந்திரப் பிரச்சினை களை எதிர்கொண்டார். அப்படியான பிரச்சினைகள் தற்போது வருமானால் இந்த அரசு நடுங்கிவிடும்.பயங்கரவா தத்தை ஒழிப்பதற்கு மஹிந்த எடுத்த முடிவால் உலகில் பலம் பொருந்திய நாடுகள் ஓரணியில் திரண்டன. இந் நிலையில் அவற்றைக் கையாள்வதற்கு மஹிந்த கையாண்ட இராஜதந்திர, அரசியல் அனுபவத்தை ஒருபோதும் மறக்க முடியாது.



அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலை வர்களுடன்தான் மஹிந்த இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டார்.

எனவே, நேரம் கிடைக்கும் பட்சத் தில், மஹிந்தவைச் சந்தித்து இராஜ தந்திரம் மற்றும் அரசியல் தொடர்பில் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தற்போதைய ஜனாதிபதி அநுரவுக்குக் கூறுகின்றோம்." – என்றார்.

# பருத்தித்துறை நகர சபையின் சாரதி திடீர் உடல்நலக் குறைவால் உயிரிழப்பு



பருத்தித்துறை நகர சபையின் சாரதியாகக் கடமையாற்றும் குடும் பஸ்தர் ஒருவர் திடீர் உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த தங்கராசா செல்வபாலன் (வயது 45) என்பவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் நேற்று வியாழக்கிழமை காலை திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்துள்ளார்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

### ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல் -2025

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம் கோரப்படவுள்ளன.

- ஏலம் கோரவுள்ள திகதி :- **07.08.2025** முற்பகல் 10.00 மணிக்கு
- **ஏலம் கோரப்படவுள்ள இடம் : - நானாவித இறைவரி பகுதி**
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் , நிபந்தனைகள், வரைபடம் என்பன தொடர்பாக மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அறிந்து கொள்ளமுடியும் .

வி.மதிவதனி
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை உரிமை மீறல் மனுவே இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

இவ்வாறு அச்சுறுத்தப்பட்ட எட்டு தமிழ் கைதிகளின் சார்பில் இந்த வழக்கை சட்டத்தரணி கேசவன் சயந்தன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். இன்றைய வழக்கில் அவரோடு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுதாரர்கள் சார்பில் ஆஜராகி வழக்காட இருக்கின்றார்.

ஏற்கனவே இந்த சம்பவம் தொடர்பாக சிறைத்துறை நடத்திய விசாரணை அறிக்கையும், பின்னர் நீதி அமைச்சராக இருந்த அலி சப்ரி நியமித்த தனிநபர் விசாரணை குழுவின் அறிக்கையும் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை இரண்டிலும் இவ்வாறு அச்சுறுத்தல் சம்பவம் நடைபெற்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதே சமயம் இந்தச் சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கின் எதிராளியான லொஹான் ரத்வத்தை நீதிமன்றத்தில் பிரசன்னமாகாத காரணத்தினால் விசாரணை தள்ளிப் போடப்பட்டது. லொஹான் ரத்வத்தை சுகவீனம் காரணமாக ஈரல் மாற்று சிகிச்சைக்காக வெளிநாடு சென்று இருக்கின்றார் எனக் கூறப்பட்டது. அதனால் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்ற வழக்கு விசாரணை தள்ளிப்போனது.

எனினும் இன்றைய உயர் நீதிமன்ற விசாரணையைப் பொறுத்தவரை அவருடைய பிரசன்னம் முக்கியமானது அல்ல என்பதால், அவர் நீதிமன்றுக்கு வராவிட்டாலும் வழக்கு விசாரணை இன்று நடைபெறும் என்றே தெரிகின்றது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற விவகாரத்தில் பல விசாரணைகள் நடைபெற்று முடிந்து விட்டன. நீதிவான் நீதிமன்ற விசாரணையும், உயர்நீதிமன்ற அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணையும் முக்கிய முடிவுகளை தரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவை வரும்போது லொஹான் ரத்வத்தை சரியான பாடம் படிப்பார் என்று நம்பலாம்.







## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது மூன்று மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. மூன்று மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 118 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 105 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான ஞா.ரனிதா, வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியல் துறை மாணவர்களும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர்.







## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொஸ்கொட – துவாமோதர பகுதியில் நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் ஆமை வளர்ப்பு நிலையத்தின் உரிமையாளரின் மகன் அருத்மெண்டிஸ்என்றுதெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கு ரி – 56 ரக துப்பாக்கிப் பயன்படுத்தப்பட்டிருப்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வேட்டையாடிகள் சிக்குகின்றனர்! வேட்டைக்காரர்கள் தப்புகின்றனர்!!

## சிறீநேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

"தமிழின அழிப்பு விடயத்தில் வேட்டையாடிகள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், வேட்டைக்கு ஆணையிட்ட வேட்டைக்காரர்கள் இன்னும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. இது விடயத்தில் அம்புகள் மாட்டிக் கொண்டுள்ளன. எய்தவர்கள் இதுவரை கைதாகவில்லை." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே அவர் இந்தக் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இறுதி யுத்தம் 2005 இல் இருந்து 2009 வரை தீவிரமாக நடைபெற்றது. அதன்போது மனிதக் கடத்தல், சித்திர வதைகள், காணாமல் ஆக்குதல் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அதற்குக் கருவிகளாகச் செயற்பட்டதாகக் கூறப்படுவோர் இந்த ஆட்சியில் கைதாகி வருகின்றனர் . ஆனால், கர்த்தார்களாக இருந்த இயக்குநர்கள் இன்னும் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விடயத்திலும் அம்புகள் அகப்படுகின்றனர். தொடுத்த வில்லர்கள் இன்னும் கைதாகவில்லை. எனவே, இந்த விடயத்தில் நாசகார வேலைகளின் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு, நீதியின் முன்பாக நிறுத்தப்பட்டு முறையான விசாரணை நடத்தப்பட்டால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை அளிப்பதற்கு உதவும்.



மாறாக வேட்டையாடிகளை மாத்திரம் கைது செய்வதால், நீதி கிடைக்கப் போவதில்லை.1956 இல் இருந்து 2015 வரை இன அழிப்பில் ஈடுபட்ட வேட்டைக்காரர்களோ, வேட்டையாடிகளோ இதுவரை தண்டிக்கப்படாத குற்றவாளிகளாக இருந்து வருகின்றனர்.

இவர்கள் அதியுச்சப் பதவிகளையும் வகித்து வந்துள்ளனர். இவைதான் இந்த நாட்டின் சாபக்கோடாகவுள்ளது. இதனால் குற்றவாளிகளின் ஆளுகையினால் நாடு குட்டிச்சுவராகியுள்ளது. ஊழல், மோசடிகள், கொள்ளை, கொலை தாண்டவமாடியதால் நாடு நாசமாக்கப்பட்டுள்ளது.

பாரிய குற்றச் செயல்களுக்கான பெரிய பெருந்தலைகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தகுதி தராதரம் பார்க்காமல் தண்டிக்கப்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கான மனிதப் படுகொலைகளுக்கான பெருந்தலைகள் மறைக்கப்படும் வரை இந்த நாடு உருப்பட வாய்ப்பு இல்லை.

குற்றச் செயல்களுக்கான சூழலை உருவாக்குதல், குற்றங்களைச் செய்ய வாய்ப்பளித்தல், குற்றவாளிகளைப் பாதுகாத்தல், குற்றவாளிகள் பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தல் என்பன நடைபெறுவதால் இந்த நாட்டில் தீர்வுக்கான உள்நாட்டுப் பொறிமுறை உருக்குலைந்து போயுள்ளது.

இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. வெலிக்கடைப் படுகொலைக்குத் தலைமை தாங்கியதாகக் கூறப்படும் விமானக் கடத்தலில் ஈடுபட்ட சிங்களக் கைதி மற்றும் மிருசுவில் படுகொலையாளியும் மரண தண்டனைக் குற்றவாளியுமான சுனில் ஆகியோர் ஜனாதிபதிகளின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டதும் பாரிய குற்றவாளிகளை இனவாத ரீதியில் பாதுகாக்கும் செயல்களாக அமைந்தன.

எனவே மனிதக் கடத்தல் காணாமல் ஆக்குதல், படுகொலைகள், வதைகள், உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் போன்ற பாரிய குற்றங்களுக்குக் கால்கோளிட்ட சூத்திரதாரிகள் வெளிச்சப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அம்புகள், வேட்டையாடிகளை மாத்திரம் தண்டிப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியோ, பரிகாரமோ கிடைக்காது. மனிதமும் நீதியும் செத்தால் சனநாயகம் பிணநாயகம் ஆகிவிடும்." – என்றுள்ளது.

# வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் காரில் வந்த மூவர் சிக்கினார்கள்

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் காரில் வந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி துறைமுகப் பொலிஸ் பிரிவில் உள்ள மீன்பிடித் துறைமுகத்துக்கு அருகில் வைத்து நேற்று மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி துறைமுகப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்றுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடந்துவ மற்றும் சீனக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 45, 54 மற்றும் 56 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து வெளிநாட்டுத் துப்பாக்கி, 9 மில்லிமீற்றர் தோட்டாக்கள் 5 என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காலி துறைமுகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முன்னாள் ஜனாதிபதிகளின் நிலை...!

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனுபவித்து வரும் சிறப்புரிமைகள், விசேட வசதிகள், சலுகைகளை அடியோடு ரத்துச் செய்வதற்கான சட்டமூலத்தை அரசாங்கம் வர்த்தமானியில் பிரசுரித்திருக்கின்றது.

பதவியில் இருந்து விலகும் ஜனாதிபதிகளுக்கு விசேட வசதிகள், சலுகைகள், கொடுப்பனவுகள் போன்றவற்றை வழங்கும் விதத்தில் கொண்டுவரப்பட்ட 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதி உரிமைச் சட்டத்தை முழுமையாக ரத்து செய்வதற்கான சட்ட மூலமே இப்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரன் இந்தச் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட சட்டமூல வாசகங்களின்படி, அது நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அனைத்து உரிமைகளும், சலுகைகளும், வசதிகளும் முழுமையாக ரத்தாகிவிடும்.

இந்த சட்டமூலத்தின்படி முன்னாள் ஜனாதிபதி அல்லது அவரது துணைவியாருக்கு வழங்கப்படும் எந்த ஒரு வீடும், மாதாந்திரக் கொடுப்பனவும், மாதாந்திர செயலகக் கொடுப்பனவும், போக்குவரத்து மற்றும் பிற வசதிகள், மாதாந்திர ஓய்வூதியம் ஆகிய அனைத்தும் ரத்து செய்யப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி என்ற முறையில் அவர்கள் எந்த விசேட வசதியையும் இனிப் பெற முடியாது. அவர்களும் இனி ஒரு சாதாரண பிரஜையே. அவ்வளவுதான். அவர்களுக்காக நாடோ, அரசோ எந்தச் செலவினத்தையும் முன்னெடுக்காது.

பதவியிலிருந்து விலகிய முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய ஐந்து ஜனாதிபதிகளும், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் துணைவியார் ஹேமா பிரேமதாஸவும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் இதுவரைத் தாங்கள் பெற்று வந்த சகல வசதிகளையும் இழப்பார்கள்.

முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இல்லங்கள், வாகனங்கள், விசேட அலுவலக வசதிகள் எல்லாம் அரசாங்கத்தினால் கைவாங்கப்படும்.

அவர்களின் பாதுகாப்பு தொடர்பான விடயம் பாதுகாப்புத் துறையினரின் கணிப்பீடுகளுக்கு அமைய அவர்களுக்கு வழங்கப்படும் என வேறு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. அந்த வசதிகள் கூட சட்ட ரீதியான கடப்பாடாக அல்லாமல், பாதுகாப்புத் தொடர்பான தேவைப்பாட்டுக்கு அமைய - அரசாங்கத்தின் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் - வழங்கப்படும் எனத் தெரிகிறது.

இதே போல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற ஓய்வூதியக் கொடுப்பனவும் சட்டத்தின் மூலம் வெட்டப்படும் என்பது உறுதியாகி உள்ளது.

எது, எப்படியாயினும் ஒரு நாட்டின் தலைவராக இருந்தவருக்கு, அவருடைய எஞ்சிய வாழ்க்கைக் காலத்தில் உரிய வசதி, வாய்ப்பு, மரியாதை, கௌரவம், சலுகை போன்றவற்றை நாடு மாண்புடன் வழங்குவது உலக நாடுகள் அனைத்திலும் பொதுவான பண்பியல்பு. இலங்கையில் அதிகாரத்துக்கு வந்திருக்கும் - தங்களை இடதுசாரிகள் என்று கூறிக் கொள்ளும் - தேசிய மக்கள் சக்தியினரின் பார்வையில் அந்த முறைமை தவறானதாகத் தென்படுகின்றது என்பது தான் இவ்விடயத்தில் பொதிந்துள்ள அம்சம்.

# முஸ்லிம் பெண்கள் கலாசார ஆடைகளை அகற்ற வழங்கிய உத்தரவு ஏற்க முடியாதது!

## திருகோணமலை எம்.பி. இம்ரான் மகரூப் விசனம்

(அபு அலா )

சுகாதாரத்துறையில் பணி புரியும் முஸ்லிம் பெண் ஊழியர்கள் அணியும் கலாசாரம் சார்ந்த ஆடைகளை அகற்றுமாறு திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கியுள்ள உத்தரவு ஏற்றுக்கொள்ள முடியாதென திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் விசனம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலையிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் முஸ்லிம் தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் மற்றும் சிற்றூழியர்கள் இனிமேல் கலாச்சார ஆடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.



தாங்கள் கடமை ஏற்றது முதல் தற்போது ஓய்வூதியம் பெறும் வயதை அடைந்துள்ள இதுவரையான காலத்தில் எங்களது சீருடையுடன் கலாச்சார உடையும் சேர்த்து அணிந்தே சென்றே கடமைகளை முன்னெடுத்து வருகிறோம்.

ஆனால், தற்போது கலாச்சார உடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என்றும் இதை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து எமக்கு நியாயம் பெற்றுத்தாருங்கள் என்று பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இனவாதம் இல்லாத ஆட்சி என்று மேடைக்கு மேடை கூறிக்கொள்ளும் இந்த அரச காலத்தில் எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் முஸ்லிம் பெண்களின் ஆடை விடயத்தில் இனவாத போக்கை கையில் எடுத்துள்ள அரச அதிகாரிகளுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது இந்த உத்தரவின் பின்னால் இந்த அரசுதான் உள்ளதா என்ற சந்தேகம் உருவாகிறது.

இந்தப் பதவிகளுக்கு உரிய சீருடைக்கு மேலதிகமாக முஸ்லிம் பெண் ஊழியர்கள் தமது கலாச்சார ஆடைகளை காலாகாலமாக அணிந்து வருகின்றார்கள். இதனை இப்போது அகற்ற சொல்லுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

இந்த உத்தரவை வாபஸ் பெறப்பட வேண்டும். இனவாதத்தை தற்போது கையில் எடுத்துள்ள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.– என்றார்.



# இலங்கையிலுள்ள ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோய் அதிகரிப்பு

இலங்கையில் பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அறுவை சிகிச்சை நிபுணர் சமன் இத்தகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக நுரையீரல் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நுரையீரல் புற்றுநோய் வெவ்வேறு காரணிகளால் ஏற்படுகிறது.

எனினும், பெரும்பாலும் சிகரெட்டுகளில் உள்ள இரசாயனங்களாலேயே அதிகளவில் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாட்டில் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் விசேட அறுவை சிகிச்சை நிபுணர் சமன் இத்தகொட குறிப்பிட்டார்.

# சிவனார் நண்பர் செந்தமிழ் சுந்தரர்!

## (இன்று சுந்தரர் குருபூசை)



அரனார் தொண்டராய் அருகி லிருந்தார்
அவரின் மனத்தில் காமம் எழுந்தது
காமனை எரித்தவர் சாபம் கொடுத்தார்
அரனின் தொண்டர் அவனியில் பிறந்தார்

புவனியில் பிறவென அரனார் மொழிந்தார்
தொண்டர் திகைத்து தாழினை பணிந்தார்
கவலை விட்டிடு காப்பேன் என்றார்
புவனியில் தொண்டர் பயணந் தொடர்ந்தார்

அந்தண குலத்தில் பிறந்தார் அடியார்
அழகாய் இருந்ததால் சுந்தரர் ஆனார்
அழகுக் குழந்தையை அரசன் கண்டான்
ஆசைப் பட்டுக் குழந்தையைக் கேட்டான்

அரசன் மனையில் சுந்தரர் வளர்ந்தார்
அணிமணி புனைந்து அவரும் இருந்தார்
ஆலால சுந்தரர் அரண்மனை வாழ்வு
ஆனந்தக் கடலாய் ஆகியே விரிந்தது

திருமண வயதை எட்டினார் சுந்தரர்
மணவினை ஆற்றிட பெற்றோர் விரும்பினர்
மங்கல நாளினில் மணமகன் மணமகள்
வந்திடும் வேளை சங்கடம் வந்தது

எந்தையாம் ஈசன் சுந்தரர் தமிழை
தந்திரம் செய்து கேட்டிட வந்தார்
கிழவனாய் வந்தார் யாவரும் கேட்டிடச்
மணமகன் சுந்தரன் அடிமையே என்றார்

அடிமை என்றதும் அனைவரும் திகைத்தனர்
மணமகன் சுந்தரர் வெகுண்டுமே எழுந்தார்
பித்தா என்று கிழவனைத் திட்டினார்
வந்தவர் யாவரும் கிழவரைப் பார்த்தனர்

அடிமை இவனே ஆதாரம் உண்டு
கிழவர் ஓலையைக் காட்டினார் சபையிலே
யாவரும் மௌனம் ஆகியே நின்றனர்
கிழவர் பின்னே மணமகன் சென்றனன்

ஆலயம் ஒன்றனுள் கிழவர் புகுந்தார்
அனைவரும் காணவே அரனார் தோன்றினார்
சுந்தரர் அழுதார் தொழுதார் அரனை
பாடிடு என்று பரமன் பணித்தார்

எப்படிப் பாடுவேன் என்றார் சுந்தரர்
திட்டிய வார்த்தையை முதலாய் கொள்ளு
பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
முத்தாய் தமிழில் முகிழ்த்துமே வந்தது

சிவனார் மகிழ்ந்தார் சேவித்தார் சுந்தரர்
தலமெலாம் சென்றார் தமிழமு தீந்தார்
சைவம் தளைக்க தத்துவம் சிறக்க
சுந்தர் செந்தமிழ் சுவையுடன் எழுந்தது

சுந்தரர் பக்தி தோழமைப் பக்தி
செந்தமிழ் அடியார் போற்றிடும் பக்தி
அந்தமில் அன்பில் விளைந்த நல்பக்தி
ஆண்டவன் அருகினில் அணைந்திடும் பக்தி

பூதலம் பிறந்த காதல் பெண்களை
கைத்தலம் பற்றிட வைத்த நல்பக்தி
காதல் தூதாய் கறைக்கண்டன் சென்றிட
கட்டளை இட்ட கனிவுடைப் பக்தி

பக்திச் சுவையினைப் பருகப் பருக
சேக்கிழார் காப்பியம் ஆக்கியே அளித்தார்
காப்பியப் பொருளைக் கொடுத்தவர் சுந்தரர்
காலம் முழுதும் நினைக்கிறார் யாவரும்

சுந்தரர் பாடல்கள் சுவையுடைப் பாடல்கள்
செந்துருப் பண்ணில் சிறந்திடும் பாடல்கள்
சம்பந்தர் அப்பர் தொட்டிடாப் பண்ணே
தமிழுக்கு வாய்த்திட்ட வரமான பண்ணே

ஏழாந் திருமுறை ஆகியே நின்று
எங்கள் சைவம் காத்திட வந்தது
ஆழமாங் கருத்தை அடக்கியே வைத்து
ஆலால சுந்தரர் அருந்தமிழ் ஈந்தது

வன்தொண்டர் பெயரைப் பெற்றிட்ட போதும்
வன்மமே இல்லா மென் தொண்டராகினார்
கயிலை நாதனே கயிலை அழைத்தார்
காமம் கலைந்தது கலந்தார் சுந்தரர்

அரச வாழ்வில் வாழ்ந்தார் சுந்தரர்
ஆனால் அகத்தில் அரனே நிறைந்தார்
மண்ணக வாழ்வைப் புண்ணிய மாக்கினார்
மாசிலா மனத்துடன் வையகம் இருந்தார்

பக்தியில் நட்பைப் புகுத்திய அடியார்
பரமனைப் பற்றியே வாழ்ந்த நல்லடியார்
முத்தியைக் கூட நட்புக்கும் பகிர
சுத்தமாம் மனத்துடன் கேட்ட நல்லடியார்

மனத்தை அடக்கு மாசுகள் அகலும்
கணத்தில் கூடக் காமம் வேண்டாம்
சிவத்தை ஒதுக்கில் சிறப்பை இழப்பாய்
அகத்தில் இருத்து அரனும் அருள்வான்

உயரிய இடத்தில் இருப்பவர் யாவரும்
உறுதியை இழந்தால் தகுதியை இழப்பார்
வேண்டா வினைகள் தொடரும் என்பதை
விளக்கிடச் சுந்தரர் பிறப்பே பாடம்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**



# சித்தானைக்குட்டி சுவாமியின் 74 ஆவது குரு பூசை இன்று!

சித்தருள் சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகளது 74 ஆவது குருபூசை விழா இன்று (01) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சுவாமி மகாசமாதி அடைந்த காரைதீவில் அமைந்துள்ள சித்தானைக்குட்டி மடாலயத்தில் இன்று 74 ஆவது குருபூஜை வழமைபோல் நடைபெற விருக்கிறது.

"'சித்தத்தில் உறைந்தவராம் சித்தானைக்குட்டி எங்கள் சித்தமெல்லாம் நிறைந்தவராம் சித்தானைக்குட்டி."

இவ்வாறு பக்தர்களால் அன்போடு பக்தியோடு நம்பிக்கையோடு பாடித்துதிக்கப்படும் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு குருபூஜை.

கோமாதா பூஜை திருவிளக்கு பூஜை நடைபெற்று பின்னர் நடைபெறும் குருபூஜையில் நாவலப்பிட்டி தொடக்கம் நாடெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வது வழமையாகும்.

குரு பூஜை நிறைவடைந்த பின்னர் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுவது மற்றும் ஒரு சிறப்பம்ச மாகும்.

மாலையில் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக் கப்படுவார்கள். தொடர்ந்து விடிய விடிய கலை நிகழ்ச்சிகள் நடந்தேறும். இது இந்த ஆலய கலாசாரமாகும்.

சுவாமி கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1951 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 21 ஆம் நாள் சுவாதி நட்சத்திர தினத்தன்று ஜீவ சமாதியானார்.

பாரத நாட்டின் இராமநாதபுரத்து சிற்றரசன் மகனாக அவதரித்த இம்மாபெரும் சித்தர் ஆடிய சித்துக்கள் எண்ணிலடங்கா.

கதிர்காம திருவிழா காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்த இம்மகான் கதிர்காம காட்டில் வழிதப்பிய வர்களுக்கு வழிகாட்டியுள்ளார். மேலும் சாண்டோ சங்கரதாசை பெரும் இரும்பரசனாக புகழ் பூக்கச் செய்த வரும் சித்தானைக்குட்டிசுவாமிகளே.

இவர் ஆடிய சித்துக்களில் குறிப்பிடத்தக்கவை, ஊமையை பேசவைத்தார். மாண்ட பெண்ணை உயிர்ப்பித்தார். கடலில் அகப்பட்டவனை மீட்டார். மாட்டிறைச்சியை மல்லிகைப் பூ ஆக்கினார். கடலின் மேலால் நடந்தார். ஒரு முறை கல்முனை சந்தியில் நின்று கதிர்காமத்தில் தீப்பிடித்த திரை சேலையை அணைத்தார். அறுத்த மீனை பலாச் சுளையாக மாற்றினார்.

இவர் ஆடிய சித்துக்கள் இன்னும் பல பல...

காரைதீவு 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலையால் தாக்கப்பட்ட போது சித்தானைக்குட்டி சமாதி கோயில் மட்டும் தப்பியது மிக மிக அற்புதமானதொன்றாகும். ஜீவ சமாதி அடைந்த இந்த மகான் இன்றும் அவரை சரணடைந்தவர்களை எத்தனையோ ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்து காத்து வருகின்றார் என பக்தர்களிடம் இருந்து பல்வேறு அனுபவங்களை கேள்விப்படுகின்றோம்.

2011 ஆம் ஆண்டு சுவாமியின் 60 ஆவது குருபூசை தினத்தில் ஐம்பொன்னாலான சித்தர் சிலை, பிரம்மரிஷி மலை அன்னை சித்தர் இராஜகுமார் சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

"ஆதியந்த மொன்றுமிலா ஐயன் வாழ்க
அருட் சக்தி வாழ்க ஐங்கரனும் வாழ்க
சோதி வடிவேல் வாழ்க தூயோர் வாழ்க
தொண்டர்ரெலாம் துயரின்றி வாழ்க வாழ்க
பூதலத்தில் மக்களெல்லாம் ஓர் தாய் பெற்ற
புத்திரர் போல் ஒருமித்து பொழிந்து வாழ்க
சாதிமத பேதமில்லா சன்மார்க்கத்தை தந்த
சித்தர் சித்தானைக்குட்டி வாழ்க வாழ்கவே."
(சித்தர்துதி)

**விபுலமாமணி வித்தகர்**
**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு நிருபர்.**



## அரசியலில் எதுவும் நடக்கலாம்:

# முதல்வர் ஸ்டாலினை மீண்டும் சந்தித்தார் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்

அரசியலில் நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை. அரசியலில் எதுவும் நடக்கலாம் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலினை இன்று இரண்டாவது முறையாக சந்தித்த பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் பா.ஜ.க. தலைமையால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்தார். இதன் எதிரொலியாக, தனது அரசியல் வாழ்க்கையில் முதன்முறையாக பா.ஜ.கவுக்கு எதிராக கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டு தனது எதிர்ப்பை பதிவு செய்தார்.

இதன் தொடர்ச்சியாக, தேசிய ஜன நாயக கூட்டணியுடன் இதுவரை கொண்டிருந்த உறவை அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு முறித்துக் கொள்வதாக, அதன் முக்கியத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் நேற்று அறிவித்தார்.

இதனிடையே, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை, ஓ.பன்னீர்செல்வம் நேற்று காலை சந்தித்துப் பேசினார். சென்னை, அடையாறு பூங்காவில் நடைப்பயிற்சி சென்றபோது இருவரும் சந்தித்துப் பேசிக் கொண்டனர். அப்போது, முதல்வர் ஸ்டாலினிடம் உடல் நலம் குறித்து ஓ.பி.எஸ். கேட்டறிந்தார் என தகவல் வெளியானது.

பின்னர், சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வர் ஸ்டாலின் வீட்டுக்கு நேற்று மாலை திடீரென சென்ற ஓ.பன்னீர்செல்வம், அவருடன் சந்திப்பு நடத்தினார். ஓ.பன்னீர்செல்வத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வீட்டு வாசல் வரை வந்து வரவேற்றார்.

இந்தச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய ஓ.பன்னீர்செல்வம், “அரசியலில் நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை. அரசியலில் எதுவும் நடக்கலாம். எனக்கென்று ஒரு சுயமரியாதை இருக்கிறது. நான் ஜெயலலிதாவோடு 25 ஆண்டு காலம் நேரடி பார்வையில் பணியாற்றி இருக்கிறேன். அரசியல் ரீதியாகவும், கட்சி ரீதியாகவும் அனைத்தும் எனக்குத் தெரியும்.

மக்களவையில் சமக்ரா சிக்ஷா நிதி உதவி பற்றி கேள்வி எழுப்பிய போது மத்திய அரசு அதை ஏற்கவில்லை. தமிழகத்துக்கு உரிய நிதி கொடுக்காததால் பா.ஜ.க. மீது எனக்கு வருத்தம் உள்ளது. மத்திய, மாநில அரசுகள் மக்களுக்கு செய்ய வேண்டியவற்றை செய்யத் தவறினால், அதைக் கண்டறிந்து தினமும் கண்டன அறிக்கை வெளியிட்டு வருகிறேன்.” - என்றார்.

முன்னதாக, தே.மு.தி.க. பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று காலை முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஒரே நாளில் 2 ஆவது முறையாக தற்போது முதல்வரை, ஓ.பன்னீர்செல்வம் சந்தித்துள்ளமை அரசியலில் கவனம் பெற்றுள்ளது.

# ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்தின இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மிரட்டல்களுக்குப் பின்னர் இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், ரஷ்ய எண்ணெய் கொள்வனவை நிறுத்தியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்யாவுடனான ஒத்துழைப்புக்கு 100 வீத வரிகளை விதிப்பதாக அச்சுறுத்தியதைத் தொடர்ந்து, இந்திய அரசுக்கு சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்திவிட்டன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

60 மில்லியன் தொன் ஆண்டு திறன் கொண்ட இந்தியாவின் 20




சுத்திகரிப்பு நிலையங்களில் 10 ஐ இயக்கும் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஒயில் நிறுவனம், ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தியுள்ளது.

இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் மங்களூர் சுத்திகரிப்பு பெட்ரோ கெமிக்கல் ஆகியவையும், இறக்குமதியை நிறுத்தியுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒபேக் நாடுகளிடமிருந்து எண்ணெய் வாங்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் உடனடி சந்தையில் மாற்று வழிகளைத் தேடுகின்றன.

இந்தியாவில் ரஷ்ய எண்ணெயை அதிகம் வாங்கும் தனியார் சுத்திகரிப்பு நிலையங்களான, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் நயாரா எனர்ஜி ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம்: ட்ரம்ப் கருத்தால் சர்ச்சை



ஒருநாள், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இது சர்வதேச அளவிலும், இந்திய அரசியலிலும் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம், இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பை அமல்படுத்துவதாக ட்ரம்ப் அறிவித்தார். இந்த வரி விதிப்பு இன்று முதல் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், "ஒருநாள், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரும்." என்று கூறி ட்ரம்ப் அடுத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில், "நாங்கள் இப்போதுதான் பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். அதன்படி, பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகப்பெரிய எண்ணெய் இருப்பை உருவாக்கவுள்ளோம். இது தெற்காசியாவின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பாக அமையும். இதை முன்னெடுத்துச் செல்லத் தகுதியான எண்ணெய் நிறுவனத்தை தேர்வு செய்து வருகிறோம். யாருக்குத் தெரியும், ஒருநாள் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எண்ணெய் விற்கலாம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆயுதங்களை இஸ்ரேலிடம் ஒப்படைக்க முடியாது: ஹிஸ்புல்லா அமைப்பின் துணை தலைவர் அறிவிப்பு



லெபனானின் அனைத்து அரசியல் பேச்சுக்களும், இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்துவதை நோக்கியதாக இருக்க வேண்டுமே தவிர, நாங்கள் ஆயுதங்களை இஸ்ரேலிடம் ஒப்படைப்பதாக இருக்கக் கூடாது என்று ஹிஸ்புல்லா அமைப்பின் துணை தலைவர் நயீம் காசிம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்புக்கு இடையிலான போரில் ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு செயல்பட்டு வருகிறது.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர். கடந்த ஆண்டு நவம்பரில் இஸ்ரேல் - ஹிஸ்புல்லா அமைப்பினர் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது.

ஆனால், ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களை கொடுத்து விட்டு சரணடைய கோரி, லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், இதற்கு ஹிஸ்புல்லா அமைப்பினரும் மறுத்து வருகின்றனர்.

இதனிடையே, போர் நிறுத்தம் தொடர்பாக தலையிட்டு வரும் அமெரிக்கா, ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களை கைவிடுவது தொடர்பாக அமைச்சரவை கூட்டத்தை கூட்டி முறையான அறிவிப்பை வெளியிடுமாறு லெபனானுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் படையால் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா கமாண்டர் புவாட் ஷுக்ரியின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி, அந்த அமைப்புன் துணை தலைவர் நஹிம் காசிம் உரை நிகழ்த்தியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், "ஆயுதங்களை ஒப்படைக்க சொல்பவர்கள், அதனை இஸ்ரேலிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

நாங்கள் இஸ்ரேலுக்கு அடிபணிய மாட்டோம். உள்நாட்டிலோ, அரபு நாடுகளிலோ அல்லது உலகளவிலோ ஆயுதங்களை கைவிடு என்று கூறுபவர்கள், இஸ்ரேலின் திட்டத்திற்கு சேவை செய்கிறார்கள். இஸ்ரேல் எங்களை தோற்கடிக்க முடியாது.

லெபனானை பணிய வைக்க முடியாது. லெபனானின் அனைத்து அரசியல் பேச்சுக்களும், இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்துவதை நோக்கிய தாக இருக்க வேண்டுமே தவிர, நாங்கள் ஆயுதங்களை இஸ்ரேலிடம் ஒப்படைப்பதாக இருக்கக் கூடாது," என தெரிவித்தார்.







# உணவுக்காக வரிசையில் காத்திருந்த பலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்

உணவுக்காக வரிசையில் காத்திருந்த 50 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலியப் படைகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் மேலும் 400 பேர் காயமடைந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் அல்-ஷி:பா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.









# வடக்கு தென்னை முக்கோண வலய அபிவிருத்தி மன்னார் செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

**(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)**

வடக்கு தென்னை முக்கோண வலய அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்த விசேட கூட்டத்தில், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேசச் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்ட தெங்கு உற்பத்தியாளர்களுக்கான உரமானியம், உதவித்தொகை, பயனாளிகளுக்கான புதிய தென்னங்கன்று என்பன வழங்கி வைக்கப்பட்டன. பனை அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.















# செம்மணிப் புதைகுழி!

மழை விழும் ஒவ்வொரு துளியிலும்
அழகிய குரல்கள் மீளச் சொல்கின்றன,
“நாங்கள் இங்கே இருக்கிறோம்... மறக்க வேண்டாம்...!”

பசுமை நிலம் பூமியின் மேல் அல்ல,
அது இரத்தம் சிந்திய மனங்களின் பூச்செடி
மௌனமும் இருண்ட குரல்களும் ஒன்று கூடிய இடம்!

தந்தையர் வார்த்தைகள் தடம் பதிக்கவில்லை
பிள்ளைகளின் கைபிடி மட்டும் வீழ்ந்திருக்கிறது
ஊரின் நடுவே ஒரு மரண மௌனம்!

பாடசாலை சுவர்கள், பூஜை கூடங்கள்,
சிறுகுழந்தைகளின் சிரிப்புடன் சிதைந்தன
வாரிசுகளின்றிப் பயணமான நினைவுகள்!

ஒவ்வொரு மீட்பு யுக்தியும் விலங்குகளைப் போல் அகற்றும்,
ஆனால் மனிதம் எங்கே? மனித உரிமைகள் எங்கே?
சமாதியின் கீழ் கனிந்த அக்கறைகள் பேசத் தயாராகின்றன!

புதைகுழிகள் பேசும்...
அவை நீதிக்காகக் காத்திருக்கும் கவிதைகள்...
செம்மணியின் இடைவெளியில்,
ஓர் இடைவெளி இருக்கிறது...
உணர்வுக்கானது...!

**நடராசா கோபிராம்,**
**உளவியல்துறை மாணவன்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**







# மனித உரிமைகள், அபிவிருத்திக்கான மையத்தின் தலைவர் உட்பட்ட சட்டத்தரணிகள் சம்பூர் விஜயம்

(எஸ்.கீதபொன்கலன்)

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தலைமையில் சட்டத்தரணிகள் குழாம் ஒன்று நேற்றைய தினம் சம்பூர் பகுதியில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அந்தப் பகுதியை பார்வையிட்டதோடு அக்கிராம மக்களுடனும் உரையாடியது.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் ஆயுபு என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை (20 ஆம் திகதி) அங்கு இருந்து சிதைந்த மனித மண்டை ஓடு மற்றும் எலும்புப்பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கடந்த 23ஆம் திகதி அந்தப் பகுதியை மூதூர் நீதி மன்ற நீதிபதி மற்றும் அரச பகுப்பாய்வு திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் காணாமல் போனோர் அலுவலகம், குற்றவியல் தடய காட்சிகள் அலுவலகம் (SOCO) ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் பார்வையிட்டனர். இதன்போது சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல் திணைக்களத்திடம் குறித்த பகுதியில் அகழ்வுப்பணியை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த புதன்கிழமை அறிக்கை பெறப்பட்டு எதிர்வரும் 6ஆம் திகதி குறித்த இடத்தில் அகழ்வுப் பணியை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கான சட்ட மாநாடு ஒன்றை நடத்துவதற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பொலிஸ் நிலையம் அமைந்துள்ள ஆதனத்தை விடுவிக்கக் கோருகிறது வவுனியா மாநகரசபை

(கி.வசந்தன்)

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள முழு ஆதனத்தையும் விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக வவுனியா மாநகரசபையின் முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

வவுனியா மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் போது கடந்த அமர்வில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளிற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முதல்வரால் தெளிவுறுத்தப்பட்டது.

அந்த வகையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள மாநகரசபைக்கு சொந்தமான காணியை விடுவிப்பது தொடர்பாக கடந்த அமர்வில் பேசப்பட்டிருந்தது.

அது தொடர்பாக பதில் அளித்த முதல்வர் வவுனியா பொலிஸ் நிலையம் அமைந்துள்ள முழு ஆதனத்தையும் விடுவித்து மாநகரசபைக்கு வழங்குமாறு நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதாக சபைக்கு தெரிவித்தார்.



# சிறுவர் பூங்கா, கலைமகள் விளையாட்டு அரங்கு உட்பட வவுனியா மாநகர சபை ஆதனங்களை பொறுப்பெடுங்கள்

## உடன் கையகப்படுத்த மாநகரசபை முதல்வர் பணிப்பு

(கி.வசந்தன்)

வவுனியாவில்மாநகரசபைக்குசொந்தமான ஆதனங்களை சில அமைப்புக்களும், குழுக்களும் மற்றும் தனியாரும் தத்தமது ஆளுகைக்குட்படுத்தியுள்ளனர். அவ்வாறான இடங்களை உடனடியாக மாநகர சபைக்குக் கையகப்படுத்தி அதன் உரிமத்துவத்தை பேணுமாறு வவுனியா மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் சபை அமர்வின் போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் லக்சனா நாகராஜன் வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா மற்றும் குருமன்காடு பகுதியில் உள்ள கலைமகள் சனசமூக நிலையம் என்பன உட்பட ஒரு சில இடங்கள் சில அமைப்புகளாலும், குழுக்களாலும் கையகப்படுத்தி செயற்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக மாநகர சபைக்கான வருமான இழப்பு ஏற்படுவதாகத் தெரிவித்திருந்தார். இவற்றை மாநகர சபையின் கீழ் கொண்டு வந்து அவற்றின் வருமானம் மற்றும் செயற்பாட்டை மாநகர சபையே மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கையையும் முன் வைத்திருந்தார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அப்துல் லரிப்பும் ஆமோதித்து கருத்து தெரிவித்தார்.

இதன் பிரகாரம் உடனடியாக குறித்த இரண்டு இடங்களுடன் மேலும் மாநகர சபைக்கு உட்பட்ட ஆதனங்களின் பெயரில் மாற்றத்தை உட்படுத்தி அது மாநகர சபையின் பெயரில் அனைத்து ஆவணங்களையும் மாற்றம் செய்து மாநகர சபையின் கீழ் கொண்டுவருமாறு முதல்வர் தெரிவித்தார்.

எனினும், இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய மாநகர சபை உறுப்பினரும், கலைமகள் சன சமூக நிலையத்தின் பொருளாளராக கடந்த 29 ஆம் தேதி வரை செயல்பட்டு வந்தவருமான வி.விஜயகுமார் குறித்த கலைமகள் சன சமூக நிலையம் அமைந்துள்ள பகுதியானது கடந்த 60 ஆண்டு காலமாக அந்த சன சமூக நிலையத்தினால் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் அங்குள்ள கட்டடங்கள் மக்களினால் அமைக்கப்பட்டன எனவும் அவற்றைப் பராமரிப்பதற்காக நிதி தேவைப்படுவதன் காரணமாகவே அது நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடப்படுவதாகவும் தெரிவித்தார்.

எனினும், மாநகர முதல்வர், வாடகைக்கு பெறுபவர்கள் மாநகர சபைக்கும் நிதி செலுத்தி, மீண்டும் சன சமூக நிலையத்துக்கும் நிதி செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது, அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது எனவும், அது முற்றும் முழுதாக மாநகர சபையினுடைய ஆதனமாக காணப்படுவதனால் அங்கு எவ்வாறான கட்டடங்கள் இருந்தாலும் அவை மாநகர சபைக்கு உரியவை எனவும் தெரிவித்து அவற்றை உடனடியாக மாநகர சபைக்குள் கொண்டு வந்து, அங்குள்ள மின்சாரப் பட்டியல் மற்றும் நீர் விநியோகப் பட்டியலிலும் மாநகரசபையின் பெயரில் பெயர் மாற்றம் செய்யுமாறும் தெரிவித்தார்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகள், வசதிகள் ரத்தாகின்றன



முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனுபவித்து வரும் சிறப்பு சலுகைகளை ரத்து செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டின் 4 ஆம் எண் ஜனாதிபதி உரிமைச் சட்டத்தை ரத்து செய்வதற்கான சட்டமூலமே இப்போது வெளியாகியுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதன்படி, இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்தின் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதி அல்லது மனைவிக்கு வழங்கப்படும் எந்தவொரு வீடு, மாதாந்திர கொடுப்பனவும், மாதாந்திர செயலகக் கொடுப்பனவு, போக்குவரத்து, பிற வசதிகள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியமும் ரத்து செய்யப்பட உள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை ரத்து செய்யும் வகையில், ஜனாதிபதியின் உரிமைகள் சட்டத்தை ரத்து செய்வதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது





# வவுனியா மாநகரசபையின் நேற்றைய அமர்வில் சோலை வரி விவகாரத்தினால் அமைதியின்மை

## ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் கடும் தர்க்கம்

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபையில் சோலை வரி தொடர்பில் அமைதியின்மை ஏற்பட்டு ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாமாநகரசபையின்இரண்டாம் அமர்வு முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கடந்த அமர்வில் சோலை வரி தொடர்பில் குடியிருப்புக்களுக்கு 8 வீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு 10 வீதமாகவும் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. இந்த விடயம் ஆளுநரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக முதல்வர் சபைக்குத் தெரியப்படுத்தினார்.

இதன்போது, சோலை வரி அறவீடு தொடர்பாக சரியான தகவல்கள் தமக்கு முன்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும், சபை முதல்வர் தவறான தகவல்களை வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுஎனவும்,குடியிருப்புவரியை 5 வீதமாக குறைக்க வேண்டும் எனவும் சுயேச்சை உறுப்பினர்களான சி.பிறேமதாஸ், சி.கிரிதரன், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான க.விஜயகுமார், க.கிருஸ்ணதாஸ், சி.சிவசங்கர், இலங்கை தொழிலாளர்கட்சியின்உறுப்பினர்களான முனாவர், பர்சான், லலித், விபுலகுமார ஆகியோர் கோரிக்கையை முன்வைத்து கருத்துரைத்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சபை முதல்வர், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய குடியிருப்புகளுக்கு 8 வீதம் அறவிட வேண்டும் எனவும், இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு விட்டது எனவும் தெரிவித்தமையுடன், சபைக்கு வருமானம் தேவை எனவும் கூறி தனது கருத்தை முன்வைத்தார்.

இதன் போது சபை உறுப்பினர்களான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எம்.லரீப், அப்துல் பாரி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சி.அருணன், தமிழ் தேசிய மக்கள் முன்னனியைச் சேர்ந்த தர்மரட்ணம் மற்றும் பிரதி முதல்வர் ப.கார்த்தீபன் ஆகியோர் சபை முதல்வருக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்தனர்.

இதனால் ஒரு மணிநேரத்திற்கு மேலாக சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீளப் பெற்று விசேட அமர்வு ஒன்றின் மூலம் சோலை வரி அறவீடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். கிராம மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். சபைக்கு வருமானம் தேவை என்பதற்காக கிராம மக்கள் பாதிக்கப்படக் கூடாது என சபை உறுப்பினர்களான பிறேமதாஸ், விஜயகுமார், சிவசங்கள், முனாவர் ஆகியோர் தொடர்ந்தும் குரல் எழுப்பிய நிலையில் முதல்வரும் அதற்கு பதில் அளிக்க சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

சுமார் ஒரு மணிநேரமாக நடந்த விவாதத்தையடுத்து இது தொடர்பில எழுத்து மூலம் தாருங்கள விசேட அமர்வு நடத்தலாம் என முதல்வர் அறிவித்தார். குற்ய்க்கிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாம் ஏற்கனவே 10 பேர் கையொப்பம் இட்டு கடிதம் வழங்கியுள்ளோம் எனத் தெரிவித்தனர். இதனையடுதது இது தொடர்பில் தொடந்தும் கலந்துரையாடுவதாக தீர்மானிக்கப்ட்டு அடுத்த விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்து.










# பொது மன்னிப்பில் ஜே.வி.பியினரை விடுவித்த மாதிரி தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள்

## ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பு நீதி அமைச்சரிடம் நேரில் சந்தித்து கோரிக்கை

ஜே.வி.பியினருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது போன்று தமிழ் அரசியல் கைதிகளையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என

“குரலற்றவர்களின் குரல்“ அமைப்பு நீதி அமைச்சரிடம் நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தைத் தான் காதுகளால் கேட்கவில்லை என்றும், இதயத்தால் கேட்பதாகவும் தெரிவித்த நீதி அமைச்சர், சட்டக் கட்டமைப்பிற்குள் இருந்து இந்த பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பார் எனக் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில், நீதி அமைச்சருடான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே “குரலற்றவர்களின் குரல்” அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் இவ்வாறு கூறியுள்ளார். மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு நீதி அமைச்சின் அலுவலகத்தில், நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார, “குரலற்றவர்களின்குரல்“அமைப்பின் பிரதிநிதிகள், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில், 15 முதல் 30 வருடங்கள் ஸ்ரீலங்கா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்கள் உறவினர்களின் நீண்டகால சிறைவாசம் காரணமாக தாங்கள் எதிர்கொண்ட உளவியல், சமூக மற்றும் பொருளாதார சவால்களை கண்ணீருடன் எடுத்துரைத்தனர். தங்களின் அன்புக்குரியவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறு அமைச்சரிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையின் இன முரண்பாடுகளால் உருவான போரின் விளைவுகளான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில், மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும்.

கடந்த காலத்தில், இலங்கை - இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், ஜே.வி.பி.க்கு பொது மன்னிப்பு, மற்றும் போருக்கு பின்னர் 12,000 விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, பல வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையை மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்குமாறு “குரலற்றவர்களின் குரல்” அமைப்பு கோரிக்கை முன்வைத்தது.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நீதி அமைச்சர் ஹர்ஷ நானயக்கார அவர்கள் கோரிக்கைகளை, தான் “காதுகளால் கேட்கவில்லை, இதயத்தால் கேட்கிறேன்” என்று குறிப்பிட்டு, சட்ட கட்டமைப்பிற்குள் இருந்து இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பார் எனக் கூறினார்.

அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு சார்ந்த விடயங்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருகின்றமையால், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பானது கடந்த ஜனவரி 2025 முதல் ஜனாதிபதி மற்றும் பிரதமர்உடனானஎழுத்துமூலகோரிக்கைக்கு அமைவாக இடம்பெற்றது என்றார்.

# 1000 பெண் உத்தியோகத்தர்கள் பொலிஸ் சேவையில் இணைப்பு




பொலிஸ் சேவையில் 1000 பெண் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அத்துடன் 5000 பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சேவையில் நிலவும் 10000 வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

# கிரிசாந்தி கொலைவழக்கு தொகுப்பு நூல் அறிமுகம்




யாழ்ப்பாண மாணவி கிரிசாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவு, கொலை வழக்கு விசாரணைகளின் விரிவான தொகுப்பு நூலான "வன்மம்" அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5. 30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சமூக செயற்பாட்டாளரும் ஆய்வாளருமான தெ. மதுசூதனன் தலைமையிலான இந்த நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவி சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும், சட்டத்தரணி நடராஜர் காண்டீபனும் நூல் அறிமுக மற்றும் விமர்சன உரைகளை நிகழ்த்துவர். கலந்துரையாடலும் இடம்பெறும்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சட்டத்தரணியும் மனித உரிமைகள் செய்பாட்டாளருமான பகவதாஸ் ஸ்ரீகந்ததாஸ் யாழ்ப்பாணத்தில் 1996 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இடம்பெற்ற கிரிசாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவு மற்றும் நான்கு கொலைகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளை விரிவாகத் தொகுத்து "வன்மம்" என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் நூலாக வெளியிட்டிருக்கிறார்.

# நிலங்களின் வரைபடங்களை வீட்டில் இருந்தே பெறலாம்





ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் இணையதளத்தில் பணம் செலுத்துவதன் மூலம்,நில வரைபடங்களை வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும் என, நில அளவையாளர் நாயகம் வை.ஜி. ஞானதிலக்க தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு தேவையான வரைபடங்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில், இன்று முதல் இணையத்தளம் மூலமாக வரைபடங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

அதேநேரம், நில தகவல் அமைப்பின் தகவல்களை இணையத்தளத்தின் வழியாக பார்வையிடும் வாய்ப்பை பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நில அளவையாளர் நாயகம் வை.ஜி. ஞானதிலக்க தெரிவித்துள்ளார்.



# கொழும்பு – காங்கேசன்துறை ரயில் சேவை ஆரம்பித்து இன்று 120 வருடங்கள் பூர்த்தி!

– ஊரெழு அ. கனகசூரியர் –

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான ரயில் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டு இன்று ஓகஸ்ட் முதலாம் திகதியன்று 120 வருடங்கள் நிறைவு பெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

இலங்கையில் ரயில் போக்குவரத்துச் சேவையை நடத்திவரும் அரச றெயில்வே திணைக்களம் 1861ஆம் ஆண்டில் தோற்றம் பெற்றது. இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சி நடந்துவந்த காலப்பகுதி அது. மத்திய மலைநாட்டுப் பகுதியில் கோப்பி, தேயிலை முதலான வர்த்தகப் பெறுமானமிக்க பயிர் உற்பத்தியில் ஆங்கிலேயப் பயிர்ச் செய்கையாளர்கள் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர். இங்கு பயிரிடப்படுவனவற்றை கொழும்புக்கு எடுத்துவந்து துறைமுகம் ஊடாக இங்கிலாந்துக்கு அனுப்பி வைப்பதற்கான அவசிய தேவை ஏற்பட்டிருந்தது. இது விடயத்தில் இலகுவானதும், துரிதமானதுமான போக்குவரத்துக்கு ரயில்சேவையே பொருத்தமானது என அரசாங்கம் தீர்மானித்தது.

முதலில் தேவையாகவிருந்தது மத்திய மாகாணத்தின் மலைநாட்டுப் பகுதியை நோக்கிய பாதையாகும். அந்தவகையில் கண்டியில் ரயில் நிலையம் ஒன்றை அமைத்து, கொழும்பிலிருந்து கண்டி வரை ரயில் பாதை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் முதற்கட்டமாக கொழும்பிலிருந்து அம்பேபுச வரையிலான ரயில் பாதை அமைப்புப் பணிகள் 1864ஆம் ஆண்டு இறுதியில் நிறைவு பெற்றன.

ரயில் சேவைக்கான அடுத்தகட்ட ஏற்பாடாக முதலாவது ரயில் என்ஜின் இங்கிலாந்திலிருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டது. நிலக்கரியை பயன்படுத்தி இயக்கப்படும் நீராவி என்ஜின்களே அன்றைய காலத்தில் இங்கிலாந்திலும் பாவனையில் இருந்தன. இந்த நீராவி என்ஜினை பயன்படுத்தி 1864 டிசெம்பர் 27ஆம் திகதியன்று கொழும்பிலிருந்து அம்பேபுச வரையிலான முதலாவது ரயில்சேவை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கண்டி வரையிலான பாதை அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1886 நவம்பர் மாதத்தில் பொல்கஹவல வரையிலும், 1867 ஏப்ரல் நடுப்பகுதியில் கண்டி வரையிலுமான பாதை நிர்மாணப்பணிகள் நிறைவு பெற்றன. அதன்பின் 1867 ஏப்ரல் 30ஆம் திகதியிலிருந்து கொழும்பு – கண்டி நேரடி ரயில் சேவை இடம்பெற்றதாக வரலாறு சொல்கிறது. பயணிகளுக்கான ரயில் சேவை 1867 ஓகஸ்ட் முதலாம் திகதியன்றே ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் கொழும்பிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கான ரயில் பாதைகள் கட்டம் கட்டமாக நிர்மாணிக்கப்பட்டு, ரயில் சேவைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த நிலையில் 1894ஆம் ஆண்டில் பொல்கஹவலயிலிருந்து குருநாகல் வரையிலான பாதை அமைக்கப்பட்டது.

வடபகுதிக்கு ரயில் சேவை ஆரம்பிப்பதற்கான தீர்மானம் 1897ஆம் ஆண்டு அரச உயர்மட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டது. 1899ஆம் ஆண்டு அரச சட்டவாக்க சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, 1990ஆம் ஆண்டில் காங்கேசன்துறையிலிருந்து குருநாகல் வரையில் பாதை அமைப்பதற்கான நிர்மாணப் பணிகள் தொடக்கி வைக்கப்பட்டன. இவை கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு, 1905ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் நிறைவு பெற்றன.

ஏற்கனவே, அதாவது 1894ஆம் ஆண்டில் கொழும்பு – குருநாகல் ரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டுவிட்டதால், வடபகுதிக்கான பாதை குருநாகல் ரயில் நிலையத்துடன் இணைக்கப்பட்டது.

காங்கேசன்துறையிலிருந்து குருநாகல் வரையிலான ரயில் பாதை நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அன்றைய காலப்பகுதியில் வடபகுதியில் ரயில் நிலையங்களை அமைக்கும் வேலைகளும் இடம்பெற்று வந்தன.

அடுத்த கட்டமாக, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இவ்வேளையில், யாழ்ப்பாணத்தில் ஒருசிலர் கிளப்பிவிட்ட புரளியினால் ரயில்சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு எதிராக மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள்.

புகைவண்டியிலிருந்து எழும் புகை பயிர்களுக்கும் காய்கறிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும், புகைவண்டி அதிர்வினால் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் காது செவிடாகிவிடும், கோழிக்கு முட்டைகளை அடைவைத்தால், அவை கூழ் முட்டைகளாகிவிடும், ஆடு, மாடு போன்ற கால்நடைகள் வெருட்சியடைந்து, அதன் கட்டுகளை அறுத்துக்கொண்டு ஓடிவிடும் என்றெல்லாம் மக்கள் மத்தியில் கதைகள் பரவின. இதுவே மக்களது எதிர்ப்புப் போராட்டத்திற்கு காரணம்.

இது விடயத்தைக் கேள்விப்பட்ட, அன்றைய காலத்தில் அரசியலுடன் இணைந்திருந்த சேர் பொன். இராமநாதன் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த மக்களை நேரடியாக சந்தித்து உரையாடினார்.

யாழ்ப்பாணத்து மாம்பழங்களை ரயில் மூலம்

தொடர்ச்சி▼



# கொழும்பு - காங்கேசன்துறை ரயில் சேவை ஆரம்பித்து இன்று 120 வருடங்கள் பூர்த்தி!

தொடர்ச்சி▲

கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்கு வசதி கிடைக்கப் போகிறது. இதனால் இரட்டிப்பு பணம் கிடைக்கும். இப்போது கதிர்காமம் போவதற்கு பல நாள்கள் செல்கின்றன. அதுவும் கால்நடையாகத்தான் செல்ல வேண்டும். ரயில் மூலம் இரண்டு நாள்களில் சென்று விடலாம். கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ரயிலில் இங்கு கொண்டு வந்தால், குறைந்த விலைக்கு பெற்றுக்கொள்ள முடியும். புகையினால் எதுவித பாதிப்பும் ஏற்படாது என்றெல்லாம் சேர் பொன். இராமநாதன் யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துச் சொன்னார். உண்மை நிலையினை புரிந்து கொண்ட மக்களும் எதிர்ப்பைக் கைவிட்டனர்.

ரயில் சேவை தொடர்பான வீணான புரளியினால் மக்கள் மனதில் உருவாகியிருந்த தவறான எண்ணங்கள் முற்றாகவே நீங்கியது. ரயில் பயணமானது போக்குவரத்துச் சேவைக்கு பெரிதும் துணையாகவும், இலகுவாகவும் இருக்கும் என்பதில் மக்கள் நம்பிக்கை கொண்டனர்.

ஆரம்ப காலத்தில் ரயில் போக்குவரத்துச் சேவை புகைவண்டி, புகையிரதம், கோச்சி என்ற பெயர்களிலேயே அழைக்கப்பட்டது.

அன்றைய நாளில் வடபகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் அனைவரும், தங்கள் வாழ்நாளில் என்றுமே கண்டிராத ஒரு நூதனப் பொருளைக் காணப்போவதாகவே நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தவகையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் முதலாவது ரயிலை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தார்கள். குறிப்பிட்ட அந்த நாளும் வந்தது.

1905ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி. அன்றைய தினம் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட முதலாவது புகைவண்டி, பெயருக்கு ஏற்றவாறு புகையைக் கக்கிக் கொண்டு, மக்களது ஆரவாரத்துக்கு மத்தியில் வெற்றிகரமாக காங்கேசன்துறையை வந்தடைந்தது. அன்றைய முதலாவது ரயில் பயணத்திற்கு 13 மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள் தேவைப்பட்டதாக வரலாற்றுத் தகவலிலிருந்து அறிய முடிகிறது.

ஆரம்ப காலத்தில் வடபகுதிக்கு இரவு தபால் ரயில் சேவையும், பகலில் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான சரக்கு வண்டி சேவையுமே இடம்பெற்று வந்தன.

ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து (1864) சுமார் 90 வருடங்கள் நிலக்கரியில் இயங்கும் நீராவி என்ஜின்களே பாவனையில் இருந்தன. 1954ஆம் ஆண்டளவில் டீசல் ரயில் என்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த நிலையில், 1955ஆம் ஆண்டு ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளராக பி.டி. ரம்பாலா என்பவர் பதவியேற்றார். இவர் ரயில் போக்குவரத்துச் சேவையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டினார். 1955 முதல் 1970 வரையிலான இவரது பதவிக்காலம் ஒரு பொற்காலம் என அந்நாளில் சிறப்பித்துச் சொல்லப்பட்டது.

இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட டீசல் என்ஜின்களைப் பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் கடுகதி ரயில் சேவைகளை ஆரம்பிப்பதற்கு பொது முகாமையாளர் தீர்மானித்தார். அவ்விதமாக சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில்களுக்கு பொருத்தமான பெயர்களைச் சூட்டுவதற்கும் விரும்பினார். தலைநகரிலிருந்து கடுகதி ரயில்கள் எந்தெந்த பிரதேசங்களை நோக்கிச் செல்கிறதோ, அந்தந்த பிரதேசங்களுடன் தொடர்புள்ள பெயர்களை சூட்டுவது பொருத்தமானது என்ற ஆலோசனை பலராலும் முன்வைக்கப்பட்டது.

கடுகதி ரயில் சேவைகளின் ஆரம்பநிலையாக 1956 ஏப்ரல் 23ஆம் திகதியன்று ரயில்வே திணைக்களம் மூன்று வசீகர சகோதரிகளை (ThreeLovely Sisters) அறிமுகம் செய்தது. கொழும்பு – காங்கேசன்துறை சேவைக்கு 'யாழ்தேவி' என்றும், கொழும்பு – பதுளை சேவைக்கு 'உடரட்ட மெனிக்கே' என்றும், கொழும்பு – மாத்தறை சேவைக்கு 'றுகுணு குமாரி' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. அன்றைய தினம் யாழ்தேவி காலை 6.00 மணிக்கும், உடரட்ட

தொடர்ச்சி▼




# கொழும்பு - காங்கேசன்துறை ரயில் சேவை ஆரம்பித்து இன்று 120 வருடங்கள் பூர்த்தி!

தொடர்ச்சி▲

மெனிக்கே காலை 9.30 மணிக்கும், ருகுணு குமாரி பிற்பகல் மணி 4.10க்கும் தங்கள் கன்னிப் பயணத்தை ஆரம்பித்தன. யாழ்தேவி பகல் மணி 1.25க்கு யாழ்ப்பாணம் சென்றடைந்தது.

கடுகதி ரயில் சேவைகளை ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரித்தபோது, வடபகுதிக்கு மற்றுமொரு கடுகதி ரயில் சேவையில் ஈடுபட்டது. அப்போது யாழ்தேவி - 1, யாழ்தேவி - 2 என இரு சேவைகளும் அழைக்கப்பட்டன. சில வருடங்களின் பின்னர் யாழ்தேவி - 2 என்பது 'உத்தரதேவி' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தினமும் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கும், அதேவேளையில் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் காலை, நண்பகல் நேரங்களில் இடம்பெற்று வந்த யாழ்தேவி, உத்தரதேவி கடுகதி ரயில் சேவைகளுடன் இரவுநேர தபால் ரயில்சேவையும், மேலதிகமாக வார இறுதி நாள்களில் விசேட கடுகதி சேவையொன்றும் நடத்தப்பட்டு வந்தது. அதாவது, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு 8.30 மணியளவில் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் விசேட கடுகதி ரயிலானது மறுநாள் அதிகாலை காங்கேசன்துறையை வந்தடையும். அதே கடுகதி ரயில் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை கொழும்பை சென்றடைவதும் வழமையாக இருந்தது.

இந்த வாரஇறுதி விசேட கடுகதி சேவையானது வடபகுதிக்கு மட்டுமே நடத்தப்பட்டு வந்ததாக தெரிய வருகிறது. அந்நாளில் வடபகுதியிலுள்ள பலர் கொழும்பிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றி வந்ததால், அவர்கள் வார இறுதி நாள்களில் தங்கள் குடும்பத்தினரை சந்திப்பதற்காக வந்து செல்வதற்கு வசதியாகவே இந்த விசேட கடுகதி ரயில் சேவை இடம்பெற்று வந்தது என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

இந்த பயணிகள் ரயில்களைத் தவிர, தினமும் சரக்கு ரயில் சேவைகள் பகலில் ஒன்றும், இரவில் இரண்டுமாக கொழும்பு கோட்டைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் இடம்பெற்று வந்தன. ஆடு, மாடு போன்ற கால்நடைகள், கோழிக்குஞ்சுகள், மரக்கறி வகைகள், பொதிகள், எரிபொருள் மற்றும் எண்ணெய் வகைகள் என்பவைகளை ஏற்றிச் செல்லும் வகையில் சரக்கு ரயில்சேவை அமைந்திருந்தது. இதுதவிர, காங்கேசன்துறைக்கும் பளைக்கும் இடையில் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கான குறுந்தூர ரயில் சேவையொன்றும் இடம்பெற்று வந்தது.

இலங்கையில் ஏனைய ரயில் சேவைகளை விட, கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான வடபகுதி ரயில் சேவைதான் பெருமளவு இலாபம் ஈட்டக்கூடியதாக அமைந்திருந்ததுடன், போர்க்காலச் சூழ்நிலைகளுக்கு முன், தினமும் ஆறாயிரத்துக்கும் அதிகமானோர் பயணம் மேற்கொண்டு வந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

அன்றைய போர்ச்சூழ்நிலைகள் காரணமாக, 1990 ஜூன் மாதத்திலிருந்து வடபகுதிக்கான ரயில் சேவை தடைப்பட்டதுடன், வவுனியா ரயில்நிலையம் வரை மட்டுமே சேவை இடம்பெற்று வந்தது. வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைகள் இருந்த இடம் தெரியாமல் முற்றாகவே சேதமடைந்திருந்தன. சில ரயில் நிலையங்களும் பெருமளவில் அழிவைச் சந்தித்திருந்தன என்று கூடச் சொல்லலாம்.

போர்ச்சூழ்நிலைகள் தணிந்த பின்னர், மக்களின் நலன்கருதி வடபகுதிக்கான ரயில் போக்குவரத்துச் சேவையை மீளவும் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அப்போதிருந்த அரசாங்கம் பெருமுயற்சி எடுத்தது. அந்த வகையில் 2009 ஜூன் 6ஆம் திகதியன்று வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வரைக்கும், 2011 மே 27ஆம் திகதியன்று ஓமந்தை வரைக்கும் இலங்கை அரசாங்க ரயில்வே திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாதை புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ரயில்சேவை நீடிக்கப்பட்டது.

அதன்பின்னர் இலங்கை அரசு, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அதற்கான நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தது. இந்திய றெயில்வே அமைச்சின் நிர்வாகத்தில் இயங்கும் இர்கொன் (IRCON) என்ற நிறுவனத்திடம் திருத்த வேலைகள் ஒப்படைக்கப்பட்டன. இந்த நிறுவனம் ஓமந்தை ரயில் நிலையத்திலிருந்து புனர்நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டது. புனரமைப்பு வேலைகள் நான்கு கட்டங்களாக வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

2013 செப்ரெம்பர் 14ஆம் திகதியன்று கிளிநொச்சி வரைக்கும் ரயில்சேவை விஸ்தரிக்கப்பட்டது. இது, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வடபகுதி ரயில்பாதை புனரமைப்பு திட்டத்தின் முதற்கட்டமாக அமைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப்பணிகள் நிறைவுபெற்று, 2014 மார்ச் 4ஆம் திகதியன்று பளை வரைக்கும் ரயில்சேவை நீடிக்கப்பட்டது. தொடர்ந்து மூன்றாம் கட்டப் பணிகளின் நிறைவாக 2014 அக்டோபர் 13ஆம் திகதியன்று பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில்சேவை நீடிப்பு அமைந்திருந்தது.

நான்காம் கட்டமாக, யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில்பாதை நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்று, 2015 ஜனவரி 2ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான நேரடி ரயில்சேவை இடம்பெறத் தொடங்கியது.

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம்

தொடர்ச்சி▼




# கொழும்பு - காங்கேசன்துறை ரயில் சேவை ஆரம்பித்து இன்று 120 வருடங்கள் பூர்த்தி!

தொடர்ச்சி▲

ரயில் நிலையம் வரையிலான நேரடி சேவை ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்கு மறுநாளிலிருந்து அதாவது 2014 ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் நாளாந்தம் கிரமமான வகையில் நான்கு ரயில்கள் சேவையில் ஈடுபடத்தொடங்கின. யாழ்தேவி, குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி, தயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) நகர்சேர் கடுகதி, இரவு தபால் ரயில் என்பனவே அவையாகும்.

இதில் ஒரு விசேடம் என்னவென்றால் யாழ்தேவியும், குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதியும் கல்கிசை ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தன. தயட்ட கிருள நகர்சேர் கடுகதியும், இரவு தபால் ரயிலும் கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபட்டன. தயட்ட கிருள நகர்சேர் கடுகதி ரயில் பின்னர் 'உத்தரதேவி' என பெயர் மாற்றம் பெற்றது.

இது தவிர, வாரஇறுதி விசேட ரயில் சேவையொன்று மாத்தறை ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை இடம்பெற்றது. 2014 டிசெம்பர் மாதம் தொடக்கம் இரு மாதங்கள் கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான வார இறுதி விசேட ரயில் சேவையொன்றும் நடைபெற்று வந்தது. அதன்பின் சிறீதேவி நகர்சேர் கடுகதி ரயில் சேவையொன்று கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் தினமும் இடம்பெற்று வந்தது.

இந்தநிலையில் இலங்கையில் ஏற்பட்ட கொரோனா கிருமித் தொற்றுப் பரவல், அதனால் அமுல்நடத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் என்பன காரணமாக நாடளாவிய ரீதியில் ரயில் சேவைகள் முற்றாகவே நிறுத்தப்பட்டன. இதனால் வடபகுதிக்கான ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டன. பல மாதங்களின் பின்னரே ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின.

2022 ஜூன் 17ஆம் திகதியிலிருந்து புதிய வாரஇறுதி குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் சேவையொன்று கல்கிசைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இரவு 10.00 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்படும் இந்த ரயில் காங்கேசன்துறை சென்றடைந்து, பின்னர் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10.00 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு கல்கிசையை வந்தடைந்தது.

அனுராதபுரத்திலிருந்து வவுனியா வரையிலான ரயில் பாதையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்காக 2023 ஜனவரி மாதத்திலிருந்து கொழும்பு - யாழ்ப்பாணம் நேரடி ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. தொடர்ந்து ஆறுமாத காலம் வரை கொழும்பிலிருந்து அனுராதபுரம் வரையிலேயே யாழ்தேவி முதலான வடபகுதி ரயில்கள் சேவையில் ஈடுபட்டன. அதேபோல, காங்கேசன்துறையிலிருந்து வவுனியா வரையில் 'யாழ்ராணி' என்ற பெயரில் ரயிலொன்று சேவையில் ஈடுபட்டது. 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை ரயில் சேவைகள் வழமைக்கு வந்தன.


2024 ஜனவரி மாத நடுப்பகுதியிலிருந்து அனுராதபுரம் முதல் மாகோ வரையிலான ரயில் பாதை திருத்தப் பணிகளுக்காக வடபகுதிக்கான நேரடி ரயில் சேவைகள் மீண்டும் நிறுத்தப்பட்டன. இந்தக் காலப்பகுதியில், கொழும்பிலிருந்து மாகோ வரையில் வடபகுதி ரயில்கள் சேவையில் ஈடுபட்டன. அதேவேளையில் காங்கேசன்துறையிலிருந்து அனுராதபுரம் வரையில் யாழ்ராணி ரயில் சேவையில் ஈடுபட்டது. திருத்தப் பணிகள் நிறைவுபெற்ற நிலையில் 2024 அக்டோபர் 28ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான நேரடி ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் வடபகுதி ரயில் பயணிகளுக்கு, முன்பிருந்ததுபோல திருப்திகரமான சேவை கிடைக்கவில்லை என்ற குறைபாடு, அப்போது பலராலும் முன்வைக்கப்பட்டது. கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரை யாழ்தேவி, குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ஆகிய இரு ரயில்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

ரயில் பாதை திருத்தப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த வடபகுதிக்கான இரவு தபால் ரயில் சேவை இவ்வருடம் ஜனவரி மாதம் 31ஆம் திகதியிலிருந்தே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. மொரட்டுவ ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை வரை இந்த சேவை நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதே வேளையில், தினமும் இடம்பெற்றுவந்த குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் சேவை, வாரத்தில் இரு நாட்கள் அதாவது சனி, ஞாயிறு தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

மீண்டும் ஜூலை மாதம் 7ஆம் திகதி முதல் வடபகுதிக்கான குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் சேவை தினமும் இடம்பெற்று வருகிறது. கல்கிசைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே இந்த சேவை நடைபெறுகிறது.

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் வரலாற்றில் ரயில் போக்குவரத்துச் சேவை தொடங்கப்பட்டு கடந்த ஆண்டு (2024) டிசெம்பர் 27ஆம் திகதியன்று 160 வருடங்கள் நிறைவாகியிருப்பதும், வடபகுதிக்கான யாழ்தேவி ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதியன்று 69 வருடங்கள் நிறைவடைந்து, 70ஆவது வருடத்தை நோக்கிய பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதும் சிறப்புக்குரிய செய்திகளாகும்.



# இன்றைய ராசி பலன்கள் -01.08.2025




இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.




நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைகளைக் காண்பீர்கள். அதிக சிந்தனையைதவிர்க்கவேண்டும்உங்கள்துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதியாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும்.

முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள்.இது பயன்தரத்தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலையோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணம் அதிக அளவில் காணப்படும். சாதுர்யமாக பணத்தை செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் மிகுந்த ஆற்றல் காணப்படும்.




இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறையும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனரமைப்பிற்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம். ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.




இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது.

இன்று பதற்றம் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் காணப்படும். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.




இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிகாக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும். குடும்பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.

தூக்கப் பிரச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும்.




உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகரியங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ள இன்றைய நாளை பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டு சிறப்பாக பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. என்றாலும் ஆரோக்கியத்தைப் பராமரிக்க நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.




இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பணியின் தரம் மேலதிகாரிகளால் பாராட்டப் படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -01.08.2025




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று ஆக்க பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன்களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்களுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்புக்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆற்றலும் தன்னம்பிக்கையும் நிறைந்து காணப்படும்.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சி யை பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.

பதற்றம் காரணமாக இன்று முதுகுவலி காணப்படும். பிராணாயாமம் செய்வது ஆரோக்கியத்துக்கு நல்லது.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.

# எரிபொருள் விலையில் இம்மாதம் திருத்தமில்லை



இந்த மாதம் எரிபொருள் விலையில் திருத்தம் இல்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 305 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 341 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 325 ரூபாவாகும்.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றர் 289 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

அதேபோல் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 185 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.